+94 76 925 2956 692, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டை தீர்மானத்தை துணிச்சலுடன் முன்னெடுத்த தந்தை செல்வா உட்பட்ட தமிழ் தலைவர்களை நினைவில் நிறுத்தி, அந்த தீர்மான கொள்கையை, தமது உயிரை அர்ப்பணித்து 2009ம் ஆண்டு வரை முன்னெடுத்த மாவீரர்களுக்கு வீரவணக்கத்தை செலுத்திக்கொள்கின்றோம்.

தமிழின அழிப்பால் இனப்படுகொலையால் படுகொலை செய்யப்பட்ட எமது தமிழ் உறவுகளை நினைவுகூருகின்றோம்.

பாசத்திற்கும், மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே !

அன்பிற்கினிய மதத் தலைவர்களே,
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே,
அரசியல் கட்சித் தலைவர்களே,
கல்வியாளர்களே,
சமூகப் பிரதிநிதிகளே,
இளைஞர்களே, புலம்பெயர் உறவுகளே, தாய்த்தமிழக உறவுகளே,

எல்லோருக்கும் எமது அன்பான வணக்கங்கள்.

## எமது தேசத்தை மீள கோருகின்றோம்.

இன்று நாம் ஒன்றுகூடியிருப்பது ஒரு சாதாரண நினைவு கூரும் நிகழ்விற்காக அல்ல. மாறாக, ஈழத்தமிழர் வரலாற்றின் ஒரு முக்கியமான திருப்புமுனையை நினைவுகூரவும், அதன் அர்த்தத்தை மீளாய்வு செய்யவும், எதிர்காலப் பாதையை வகுக்கவும் நாம் ஒன்று கூடியுள்ளோம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, 1976 ஆம் ஆண்டு மே 14 ஆம் நாள், வட்டுக்கோட்டையில் கூடிய தமிழர் அரசியல் தலைமைகள், தந்தை செல்வா அவர்களின் தலைமையில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தாம் இழந்த இறைமையையும், தேசத்தையும் மீளப்பெறுவதற்கான உறுதிப்பாட்டினை வெளிப்படுத்திய வரலாற்று நிகழ்வாகும். இந்த தீர்மானம் ஒரு அரசியல் ஆவணம் மட்டுமல்ல, இது ஒரு தேசிய இனத்தின் அரசியல் உணர்வின் வெளிப்பாடு. தலைமுறைகளின் தியாகங்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு தேசியப் பிரகடனம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் தோன்றிய சூழலை நாம் மறக்க முடியாது. பல தசாப்தங்களாக தமிழர்கள் சமத்துவம், மொழி உரிமை, கல்வி உரிமை, நில உரிமை மற்றும் அரசியல் பங்குபற்றலுக்காக ஜனநாயக வழிகளில் போராடினர். ஆனால் ஒவ்வொரு முறையும் அவர்கள் எதிர்கொண்டது மறுப்பையும் ஒடுக்குமுறையையும், சிங்கள ஏகாதிபத்தியத்தின் வன்முறையையும்தான்.

1956 ஆம் ஆண்டின் "சிங்களம் மட்டும்" சட்டம், 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளின் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனவன்முறைகள், கல்வியில் தரப்படுத்தல், அரச ஆதரவு குடியேற்றங்கள் – இவை அனைத்தும் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்த ஆழமான கேள்விகளை எழுப்பின.

அந்தப் பின்னணியில்தான் வட்டுக்கோட்டைத் தீர்மானம் உருவானது.

இது ஒரு கோபத்தின் தீர்மானம் அல்ல.
இது ஒரு விடுதலையின் அறிவிப்பு.

இது வெறுப்பின் வெளிப்பாடு அல்ல.
இது சுயநிர்ணயத்தின் மொழி.

இது பிரிவினைக்கான அழைப்பு அல்ல; இழந்த தேசத்தை மீள பெறுவதற்கான உறுதிப்பாடு.

இது ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமையையும், அரசு உரிமையையும் உலகிற்கு எடுத்துரைத்த வரலாற்றுப் பிரகடனம்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஏகோபித்த ஜனநாயக ஆணை வழங்கினர். இதுவே ஈழத்தமிழினம் இறுதியாக தமது அரசியல் விருப்பை வெளிப்படுத்த அமைத்த ஓர் சந்தர்ப்பமாக அமைந்தது. அதன் பின் ஈழத்தமிழினத்தின் குரல்வளையை இன்னும் அதிகமாக நசுக்குவதிலேயே சிங்கள பேரினவாதம் குறியாக இருந்தது.

இன்று, ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி என்ன?

வட்டுக்கோட்டைத் தீர்மானம் இன்னும் பொருத்தமுடையதா?

எமது பதில் தெளிவானது.

ஆம்.

ஏனெனில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஒரு காலகட்டத்திற்கான ஆவணம் அல்ல. அது ஈழத்தமிழ் தேசிய இனத்தின் அரசியல் உரிமைகள் பற்றிய அடிப்படைக் கொள்கைகளின் பிரகடனம். ஈழத்தமிழினம் எவ்வித ஒடுக்குமுறைகளுமின்றி, சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதை உறுதி செய்யும் இறுதி இலக்கின் வரைபடம்.

சுயநிர்ணய உரிமை காலாவதியாகாது.
ஒரு மக்களின் தாயக உரிமை அழியாது.
தேசிய அடையாளம் மறைந்துவிடாது.

இன்று உலகம் மாறியுள்ளது. தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. அரசியல் சூழ்நிலைகள் மாறியுள்ளன. ஆனால் தமிழர் தேசியக் கேள்வியின் அடிப்படை அம்சங்கள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன.

எனவே, வட்டுக்கோட்டை-50 என்பது கடந்த காலத்தை நினைவுகூர்வது மட்டுமல்ல. எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் இருக்க வேண்டும்.

அன்பான ஈழத்தமிழ் மக்களே!

இன்றும் எம்முன்னே ஒரு வரலாற்று கடமை உள்ளது. எமது முதல் தலைமுறையினர் வழங்கிய ஜனநாயக ஆணை இன்றும் உயிரோடு உள்ளது. மக்கள் ஆணையை சிரமேற்ற எமது இளைய சமூகம்

உயிரைக்கொடுத்து இந்த ஆணையை முன்னெடுத்தது. இரத்தத்தினாலும், உயிர்கொடையினாலும், அர்ப்பணிப்புகளினாலும் வளர்க்கப்பட்ட எமது விடுதலை வேள்வி இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. எமது விடுதலை போராட்டத்தினை பயங்கரவாதமாக சித்தரித்த சிங்கள பேரினவாதம் இன்று உலக நாடுகள் முன்னே அம்பலப்பட்டு நிற்கிறது. சிறிலங்காவின் ஆட்சிக்கட்டில் அரசுகள் மாறினாலும் அவர்களின் பேரினவாத சிந்தனையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. மயிலத்தனை - மாதவனை மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு முதல் தையிட்டி சட்டவிரோத விகாரை வரை தமிழர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றுப்பட்ட வண்ணமே உள்ளனர்.

மேதகு அவர்களின் கூற்றுக்கு இணங்க "வரலாறு எமது வழிகாட்டி". வரலாற்றில் தமிழர் அரசும், சிங்கள அரசும் தனித்தனியாக இருந்த போதே தான் இந்த தீவு அமைதியாகவும், செழிப்பாகவும், வளமாகவும் இருந்தது. இரு இனங்களும் தமது மொழி, சமய, கலாசார, பண்பாடு மற்றும் இன அடையாளங்களை பேணி பாதுகாக்க கூடியதாக இருந்தது. எண்ணிக்கையில் கூடியவர்கள் எம்மீது ஆதிக்கம் செலுத்தாமலும், எமது வளங்களை சுரண்டாமலும், எமது மொழி, மதம் பண்பாட்டை சிதைக்காமலும் நிம்மதியாக வாழக்கூடியதாக இருந்தது.

நாம் மீண்டும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமெனின் தமிழ்த் தேசியத்தின் பல்வேறு தளங்களில் இயங்கும் அரசியல் சக்திகள், சமூக அமைப்புகள், மதத்தலைவர்கள், இளைஞர்கள், பெண்கள், அறிவுஜீவிகள், புலம்பெயர் சமூகங்கள் மற்றும் தமிழக தொப்புள்கொடி உறவுகள் – அனைவரும் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பால் ஒன்றுபடவேண்டும்.

நாம் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம்.
ஆனால் அனைவரும் தமிழரே.
எமது வரலாறு ஒன்றே.
எமது எதிர்காலமும் ஒன்றாக இருக்க வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களில் அரசியலை முன்னெடுக்கும் அரசியல் தலைமைகள், ஒரேயொரு மக்கள் ஆணையை பெற்ற வட்டுக்கோட்டை தீர்மானத்தை மையமாக வைத்தே தமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். வட்டுக்கோட்டை தீர்மானத்தையே மக்களை இணைக்கும் மையவிசையாகவும் கொள்ளவேண்டும். அதைவிடுத்து மீண்டும் ஒருமுறை நீங்களும் எமது மக்களையும் சிங்கள பேரினவாதத்தின் சூழ்ச்சி வலையில் வீழ்த்தி, மீண்டும் ஒருமுறை ஏமாற்றவோ, ஏமாறவோ வேண்டாம்.

எமது விடுதலை பயணத்தில் புலம்பெயர் தமிழர்களின் பங்கும் இன்றியமையாதது. உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள், தாயக மக்களின் குரலை உலக அரங்கில் எடுத்துச் சென்றுள்ளனர். கல்வி, பொருளாதாரம், மனித உரிமைகள் மற்றும் அரசியல் ஆதரவு ஆகிய துறைகளில் அவர்கள் ஆற்றிய, ஆற்றிவருகின்ற பங்களிப்பு அளப்பரியது.
எதிர்காலம் புலம்பெயர் தலைமுறையினரின் கைகளிலும் உள்ளது. அவர்கள் தமது அடையாளத்தையும் மொழியையும் வரலாற்றையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இன்றைய இளைஞர்களிடம் நாம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஒரு வரலாற்று ஆவணமாக மட்டும் பார்க்காதீர்கள்.
அதை ஒரு அரசியல் சிந்தனையாகப் புரிந்துகொள்ளுங்கள்.
அதை ஒரு தலைமுறையின் கனவாக வாசியுங்கள்.

அதை எதிர்காலத்திற்கான பொறுப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

சிங்கள சகோதர, சகோதரிகளே!

உங்களுக்கு தொடர்ச்சியாக உங்களின் அரசியல்வாதிகளினாலும், பேரினவாத சிந்தனையாளர்களினாலும் பரப்பப்பட்ட பொய்யான வியாக்கியானங்கள் போல் நாம் பயங்கரவாதத்தினால் இந்த தீவை கூறு போட விளையவில்லை. நாம் காலனித்துவ ஆட்சியினால் பறிக்கப்பட்ட எமது நாட்டினை, எமது இறைமையினையே மீளவும் கேட்கின்றோம். உங்கள் நிலத்தில் ஓர் அங்குலம் தன்னும் நாம் கேட்கவில்லை. உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ, உங்கள் இறைமையை பறிக்கவோ விளையவில்லை. 1833 கோல்புரூக்-கேமரூன் (Colebrooke-Cameron) சீர்திருத்தத்திற்கு முன்பு இந்த தீவு எக்காலத்திலும் ஒற்றை ஆட்சியின் கீழ் இருந்ததில்லை. ஆங்கிலேயர் தமது ஆட்சி இலகுவிற்காக ஒன்றாக்கியதை பற்றிப்பிடித்துள்ள சிங்கள ஆட்சியாளர்கள், தமது அதிகாரத்தினை தக்க வைத்துக்கொள்ள இனவாதத்தை தூண்டி அழிவினையே உருவாக்கி வருகின்றனர். எம்மை மீறி எமது ஒப்புதல் இன்றி உருவாக்கப்பட்ட இணைப்பு முறையில் இணைந்து வாழ நாம் எடுத்த முயற்சிகளான 1957 செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965 இல் டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன ஒருதலைபட்சமாக கிழித்தெறியப்பட்டன. அதன் பின் இராணுவ சமநிலையில் மேலாக இருந்த தருணத்தில் கூட சமாதானத்தை விரும்பி ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்து, சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்திய போதும் மீண்டும் ஏமாற்றப்பட்டு, தமிழினமே இனவழிப்பு செய்யப்பட்டது.

எமது நாட்டினை நாம் மீண்டும் பெறவேண்டும் என்ற கோரிக்கை இன்று நேற்று உருவானது அல்ல. 1968ம் ஆண்டு கிராமிய சபைகள் தொடர்பான வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதனை கடுமையாக எதிர்த்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் அவர்கள் தமிழ் மக்கள் மீண்டும் தமது பழமையான தமிழ் இராசதானியை தமது மரபுவழி தாயகத்தில் உருவாக்க அழைப்பு விடுத்தார். இதன் மூலம் மட்டுமே தமிழினம் சுதந்திரமாகவும், தனித்துவத்துடனும் இந்த தீவில் வாழ முடியும் என தீர்க்கதரிசனமாக அறிவித்தார். இவ்வாறாக தமிழ்மக்களிடையே கனன்ற விடுதலை தீயை வட்டுக்கோட்டை தீர்மானம் ஓர் அரசியல் வடிவமாக்கி, தமிழினத்தின் ஏகோபித்த ஜனநாயக ஆணையை 1977ம் ஆண்டு தேர்தலினூடாக வரிந்தும் கொண்டது. வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காலத்துடன் ஒப்பிடும் போது, 1956ம் ஆண்டு அம்பாறை மாவட்டம் கல்லோயா (இங்கினியாக்கலை) முதல் 2009 முள்ளிவாய்க்கால் வரை இனவழிப்புக்கு உள்ளான, தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு உள்ளாக்கப்படும் இனமாக உள்ள எமக்கு வட்டுக்கோட்டை தீர்மானம் வகுத்த வழியே நிரந்தரத் தீர்வையும், தமிழ் இனத்தின் வாழ்வையும் உறுதி செய்யும். இந்த யதார்த்தத்தை நீங்களும் விளங்கிக் கொள்வீர்கள் என நம்புகிறோம்.

அன்பான தாய்த் தமிழக தொப்புள் கொடி உறவுகளே!

உங்களுக்கும் ஈழத்தமிழருக்குமான உறவு வரலாறுகளை கடந்தது. தாய்-சேய் உறவு போன்றது. என்றுமே பிரிக்க முடியாதது. ஆனாலும் இன்று இந்த உறவை பிரிப்பதற்கு எதிரிகள் பல்வேறு தந்திரங்களை கையாண்டு வருகின்றனர். இதனை நீங்கள் விளங்கிக்கொண்டு, அனைத்து சதிகளையும் முறியடித்து

எம்மோடு என்றும் தோள் நிற்பீர்கள் என்று நம்புகிறோம். எமது அரசியல் போராட்டங்களிலும், ஆயுத போராட்டத்திலும் உங்களின் பங்களிப்பு அளப்பரியது. தொடர்ந்தும் நாம் வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்கொண்டு செல்ல உங்களுடனும் கைகோர்த்து நிற்கின்றோம். இன்று புதிதாக அரசேறியுள்ள தமிழக முதல்வரிடமும் ஈழத்தமிழரின் தேசிய கேள்வியை வட்டுக்கோட்டை தீர்மானத்தினூடாக அணுகுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்பான இந்திய தேசத்து மக்களே!

ஈழத்தமிழராகிய நாம் தெற்கு ஆசிய பிராந்தியத்தின் வல்லரசான இந்திய தேசத்தை அன்புடன் தந்தை தேசமாகவே அணுகுகிறோம். பல்வேறு மொழி, கலாசாரம், பண்புகளை கொண்ட பலதேசிய இனங்கள் ஒன்றாக சமத்துவத்துடன் அதிகாரங்களை பகிர்ந்து கூடி வாழ்வதை வியந்து பார்க்கிறோம். உங்களின் தேச ஒருமைப்பாட்டினை நாம் பெரிதும் மதிக்கிறோம். வருந்தத்தக்கவிதமாக அவ்வாறான சூழமைவு இங்கு இல்லை. சிங்கள வல்லாதிக்க சக்திகள் எம்மை தொடர்ந்து அடிமைப்படுத்துவது இந்த பிராந்தியத்தின் சமநிலையை குலைப்பதற்கே வழிவகுக்கும். நாம் தனி தேசமாக மலர்வதே இந்திய தேசத்தின் தென்மண்டல பாதுகாப்பினை உறுதிசெய்வதுடன், உங்களுக்கு அருகே உங்களுக்கான உற்ற ஒரு நட்பு தேசம் உங்களுக்கு உருவாகும்.

பல்தேசிய உலக நாடுகளே!

இன்று உருவாகியுள்ள பல்துருவ உலக ஒழுங்கில் நாம் அனைத்து தரப்பினரையும் வரவேற்கவும் ஒத்துழைக்கவும் நாம் தயாராக உள்ளோம். எமது தேசவிடுதலைக்கு எமக்கு தோள்கொடுக்கும் அனைத்து சக்திகளின் ஆதரவினை பெற்றுக்கொள்ளவும், இணைத்து பயணிக்கவும் நாம் தயாராக உள்ளோம். எமது விடுதலை பயணமும் உங்களின் தேச நலன்களும் சந்திக்கும் புள்ளியில் நாம் இணைந்து பயணிக்க தயாராக உள்ளோம்.

இன்று நாம் நினைவுகூருவது ஒரு தீர்மானத்தை அல்ல.

ஒரு மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை.

நாம் நினைவுகூருவது தந்தை செல்வா போன்ற தலைவர்களின் தியாகங்களையும், எமது விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரச்செல்வங்களையும், தமது உடல் அங்கங்களையும், தமது இளமை காலங்களையும் இழந்த விடுதலை வீரர்களின் ஈகங்களையும்

நாம் நினைவுகூருவது எமது மக்களின் உயிர் தியாகங்களையும், துன்பங்களையும் நம்பிக்கைகளையும்.

அன்புடைய உறவுகளே,

வட்டுக்கோட்டை-50 ஒரு முடிவல்ல.

வரலாற்றை நினைவுகூரும் ஒரு நிகழ்வாக மட்டுமன்றி, தமிழர் அரசியல் சிந்தனையை புதுப்பிக்கும் ஒரு சந்திப்பாகவும் இது அமைய வேண்டும்.

வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழு
VADDUKODDAI 50 UPRISING CONFERENCE ORGANIZING COMMITTEE
+94 76 925 2956
692, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

இது ஒரு புதிய ஆரம்பம். பூமி பந்தெங்கும் பரந்து வாழும் தமிழினம், தமிழ் தேசியம் என்ற ஒற்றை குடையின் கீழ் ஒன்றுபட வேண்டும். தமிழன் இல்லாத நாடும் இல்லை; தமிழனுக்கு என்று ஒரு நாடுமில்லை என்ற குறையை போக்க வட்டுக்கோட்டை தீர்மானம் முன்மொழிந்த எமது தேசத்தினை கட்டியெழுப்ப ஒன்றுபட வேண்டும். இதனூடாக தமிழருக்கான தேசம் இந்த மண்ணில் பிறக்க அனைவரும் பாடுபட வேண்டும்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் ஆன்மா இன்று எம்மிடம் ஒரு கேள்வியை எழுப்புகிறது:

"நீங்கள் பெற்ற வரலாற்றுப் பொறுப்பை அடுத்த தலைமுறைக்கு எவ்வாறு கொண்டு செல்லப் போகிறீர்கள்?"

அந்தக் கேள்விக்கான பதிலை எமது செயல்களால் வழங்குவோம். தற்போது எம்முன்னே உள்ள ஜனநாயக தெரிவான, சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் சர்வசன வாக்கெடுப்பினூடாக எமது தேசத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தினை பெற வேண்டும். எமக்கான ஜனநாயக தெரிவுகள் மூடப்படுமிடத்து காலம் உரிய வழிகளை திறக்கும். இதற்கு வரலாற்று பாடங்களே சாட்சி.

தமிழர் தேசியத்தின் உரிமைகளுக்காக,
தமிழின விடுதலைக்காக
தமிழர் எதிர்காலத்திற்காக,

நாம் ஒன்றிணைவோம்.

நன்றி.

வேலன்

தவத்திரு வேலன் சுவாமிகள்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
வட்டுக்கோட்டை-50 எழுச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழு

+94 76 925 2956 vaddukoddai50@gmail.com 692, Point Pedro Road, Nallur, Jaffna வட்டுக்கோட்டை 50 @vaddukoddai50